2003 ஏப்ரல் 21]

276—

மின்சாரம் தயாரித்தல்

***20780—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியிலுள்ள மோர்தானா அணைக்கட்டில் மின்சாரம் தயாரிக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்தோரையும் நாடிக் கண்டு நல உதவிகள் வழங்கிடும் நன்மணியாம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். என் தொகுதியிலுள்ள மோர்தானா அணைக்கட்டிற்கு ஒரு கிலோ மீட்டர் அருகாமையில், கெங்கன்சிரசு என்ற நீர்ப்பரப்பு, சுருளி நீர்வீழ்ச்சி உள்ளது. அங்கிருந்து வரும் தண்ணீர், மழைக் காலங்களில் மோர்தானா அணையில் நிரம்பி வழிகிறது. மேலும் தற்போது அணைக்கட்டில் 28 அடி அளவிற்கு தண்ணீர் உயர்ந்திருக்கிறது. கிராமத்து மக்கள் நீர் மின்சாரத்தின் ஆதாரத்தையே நம்பி வாழ்கின்றனர். ஆகவே மோர்தானா அணைக்கு அருகாமையிலுள்ள குண்டலபள்ளி, அரவட்லா, கங்கானபள்ளி, ராக்கிமானபள்ளி, அத்திக்குப்பம், சிவனகிரி, திட்டப்பள்ளி, காஸ்மானபண்டா போன்ற மலைவாழ்ப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு உதவியாக, மாண்புமிகு அம்மாவின் அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து, மோர்தானா அணைக்கட்டில் நீர் மின்சாரம் தயாரிக்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய நான் விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோர்தானா அணை 2000 ஆம் ஆண்டில் கட்டபபட்டுள்ளது. ஒரு அணை கட்டப்பட்ட பின்பு, அதில் நீர்மின்சாரம் தயாரிப்பதற்கு குறைந்தது 5 ஆண்டுகளாவது பாசனத்திற்காக விடப்படுகின்ற நீரின் அளவும், பாசனத்தின் அளவும் குறித்து ஆராய்ந்த பின்னரே அதுகுறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகவே 5 ஆண்டுகள் கழித்து, 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் அதுகுறித்து ஆராயப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 277, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

277—

அமுதம் பல்பொருள் அங்காடி

***22733—திரு. ப. நீலகண்டன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் தற்போது இயங்கிவரும் அரசு அமுதம் பல்பொருள் அங்காடிகளைப்போல் பிற நகரங்களிலும் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இயங்கிவரும் அரசு அமுதம் பல்பொருள் அங்காடிகளைப் போல பிற நகரங்களிலும் அமைக்கின்ற வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழாது.